ஆசார்யஸ்ரீ ஸமந்தபத்ர அடிகள் இயற்றியருளிய

ஸ்ரீ ஸ்துதிவித்யா மலர்

முதல் பாகம்

தமிழாக்கம்

முனைவர் சக்ரவர்த்தி தேவகுமார்

முன்னிட்டு வெளியிடுவோர்

S.K. **பிரசன்ஜித்தன்** S. **சம்ருத்தா** S.K. **ப்ரணவஜித்தன்**

Bibliographic Data

Name of the Book	Thiru StutiVidya Malar (Part I)
	(ஸ்ரீ ஸ்துதிவித்யா மலர்)
Subject	Jainism Hymnology
Language	Tamil
Author	Rev. Acharya Thiru Samantabhadra (in Sanskrit)
Translator in Tamil	Dr. C. Devakumar
Translation Contributors	K. A. Simmachandran
	Suganthi Bhadrabahu
	Devika Vaijayanthan
Publisher	V.Adhidoss & A.Amsa
	Jain Street, Uppuvellore, 604154
	Mobile: 9442248248
Copyright	Translator & Publisher
Date of Publication	30-Jan-2024
Paper Size	A4 Size
Pages	87 Pages
Copies	500 Nos
Type Size	10 & 12 Points
Printers	Shridharan Printers, Villupuram Mob:9787300353

பொதுவாக காந்தியற்று பலவீனமானவனின் நிழல் இல்லாதது போல் தோன்றும். பகவானுக்கு இந்த நியாயம் ஒவ்வாத பெரிய விந்தை. இங்கே நிழல் என்ற சொல்லுக்கு இரண்டு பொருள்கள் உள்ளன - ஒன்று ஒளி வீச்சு அல்லது காந்தி மற்றொன்று பிரதிபலிப்பு. அவற்றுள் முதலாவது பிரதிபலிப்பு அதாவது காந்தி என்ற பொருள் பொருந்தும்.

இத்திருப்பாவை கீழ்க்காணும் சித்திர அமைப்புள் நிரப்பவும்:

சார்வஸ்யைவ க்ரமேடஜஸ்ய துங்க$_3$: ஸாயோ நமன்னபா$_4$த் ।

ஸர்வதோ வக்த்ரமேகாஸ்யமங்க$_3$ம் சா$_2$யோநமப்யபா$_4$த் ॥49॥



கவி கமகி வாதி வாக்மீ முதலிய சிறப்புகளால் கௌரவிக்கப்பெற்ற தவத்திரு ஆசார்ய ஸமந்தபத்திர அடிகள் இயற்றியருளிய **ஸ்ரீ ஸ்துதி வித்யா** எனும் நூலின் முதல் பாகம் நிறைவுற்றது.

<u>அவை அடக்கம்</u>

அக்ஷரமாத்ரபத$_3$ஸ்வரஹீனம், வ்யஞ்ஜனஸந்தி$_4$விவர்ஜிதரேப$_2$ம்।
ஸாது$_4$பி$_4$ரத்ர மம க்ஷமிதவ்யம், கோ ந விமுஹ்யதி ஶாஸ்த்ரஸமுத்$_3$ரே ।

<u>உலக நன்மை வேண்டுதல்</u>

திங்கள் மும்மாரி பெய்க! திருவறம் வளர்க !
செங்கோல் நன்கினிதரசன் ஆள்க ! நாடெலாம் விளைக மற்றும்
எங்குள அறத்தினோரும் இனிதூழி வாழ்க ! எங்கள்
புங்கவன் பயந்த நன்
நூல் புகழுடன் பொலிக மிக்கே !

துங்க$_3$: மிகவும் உயர்ந்த
ஸாய: புண்ணியவானாகின்றார்கள்!
அபா$_4$த் அப்படிப்பட்ட
அஸ்ய வாஸுபூஜ்ய பகவானின்
ஏகாஸ்யம் ஒரு முகமானது
வக்த்ரம் அபி நான்கு முகங்களாக
ஸர்வத: தென்படுகின்றன!
சா$_2$யோனம் நிழலில்லாத
அங்க$_3$ம் அவர் உடலின்
சாரு காந்தி மிகவும் அழகாக தென்படுகிறது!
அபா$_4$த் அப்படிப்பட்ட வாஸுபூஜ்ய பகவானை வணங்குகின்ற பவ்யர்களும் அவ்விதமே உயர்ந்த காந்தியைப் பெறுகிறார்கள்!

விளக்கவுரை:

சர்வஜ்ஞரை தரிசனம் செய்து வணங்குபவருக்கு நல்வினை வளர்கிறது. இறைவனைப் போலவே தம் அந்தஸ்தில் உயர்வர். பக்தர்களின் வனப்பும் வலிமையும் செல்வாக்கும் வளரும். இந்த கர்ம ஸித்தாந்த உண்மையை 10-ஆவது துதிப்பாவில் கதப்ரத்யாகத அலங்காரத்தோடு வருணித்தருளினர்.

இந்த திருப்பாவில் அருக பெருமானின் காதி வினையழிந்ததனால் தோன்றும் பத்ததிசயங்களில் இரண்டை வருணித்தருளினர். இந்த பத்து அதிசயங்களின் மேற்கோள்கள் முன்பு 46-ஆம் துதியில் தரப்பெற்றன. பகவன் எங்ஙனம் ஒருமுகத்தாரானவர் நான்முகனானார். அவரது திருமேனியிலிருந்து நிழல் விழுவதில்லை. ஏனெனில் சூரிய- சந்திர ஒளி அவர்களின் கோடி இந்து சூரியனுக்கு நிகரான பேரொளியின் முன்னே ஒளியிழந்து விடுகின்றன.

இந்த இரு விந்தைகளை முரண்பாட்டு சொல்லணியாக யாத்தருளினர். உலக வழக்கில் ஒரு முகத்தான் நான்கு புறத்திலும் புலப்படான். ஆயினும் அருக பெருமான் லோகோத்தமர். அடிகட்கு இந்த உலக உபசாரம் ஒவ்வாது. லோகோக்தி அதாவது வழக்கு மொழி 'பிறர் அடியில் பணிந்தவர் உயர்ந்தவர் இல்லை, உயர்ந்தவர் யாருடைய காலிலும் வீழ்ந்தவர் இல்லை' இந்த வழக்குரையும் அருகதாசருக்குப் பொருந்தாது

Dr. C. Devakumar, FNAAS

Member, Academic Council, ICAR-IARI DU, New Delhi
Member, ICAR Apex Committee on Revision of Recruitment Qualifications of RMP and non-RMP.
Member, Research Advisory Committee of ICAR-CTCRI, Thiruvananthapuram, Kerala
Former Member, His Excellency TN Governor's Committee on Selection of A Panel of Candidates for VC of TNAU, Coimbatore
Former FAO TCDC Consultant (Quality Assurance)
Former Assistant Director General, ICAR,
Former Principal Scientist, ICAR-IARI, New Delhi
Former Consultant (Innovation & Change Management),The World Bank-sponsored ICAR's National Agricultural Innovation Project (NAIP),
Former Chairman, Committee on Review of Soil Science Research, TNAU, Coimbatore;
Former Chairman, Committee on Revision of Specifications of Neem Coated Urea, Department of Agriculture Cooperation and Farmers Welfare, GOI.
& Former Editor, National Academy of Agricultural Sciences India

ஸ்ரீ ஜைநாகம சுவாத்யாய குழுமத்தின் தோற்றுநர் முனைவர் திருமிகு.தேவகுமார் சக்கரவர்த்தி அவர்கள்.
இக்குழுவில் இவர் பல ஆண்டுகளாக ஆகம சுவாத்யாயம் செய்து சிறப்பாக நடத்தி வருகிறார். அவர் குரலொலி மூலம் தந்த ஸ்ரீ ஸ்துதிவித்யா மலராக மலர பெருதும் வழிநடத்திய அன்னாருக்கும்; உறுதுணையாற்றிய குழுவினர்களுக்கும், அச்சுத்தேரேற்றி அளித்த திருமிகு பேரணி ஸ்ரீதரனாருக்கும் எங்களின் சிரம் தாழ்ந்த நன்றிகள் !.

நூன்முகம்

திரு ஸ்துதிவித்யா எனும் இந்நூலின் ஆசிரியர் **தவத்திரு ஆசார்யர் ஸமந்தபத்ர அடிகள் (பொது ஊழி** 120-185) சோழ நாட்டின் இளவரசனாகப் பிறந்து பன்மொழிகளிலும் பல்துறைகளிலும் தமது திறனையும் வளர்த்து பல புதுமைகளையும் தோற்றிய பெருமான். தவத்திரு ஆசார்யர் குந்தகுந்தர் அடிகட்கு அடுத்து , சமணத்தின் உயிர் மூச்சு இவர்களே ஆவர். தமிழில் வழங்கிய அருங்கலச்செப்பை வடமொழியில் இரத்தினகரண்டகமாக்கி (இரத்தினகரண்டகம் = மணிச்செப்பு) உலகிற்கு ஈந்தவர். சியாத்வாதம் மற்றும் ஒத்திசைவான தர்க்கங்களுடன் (logics) சமணத் தத்துவத்தை புதுப்பித்து சமணத்திற்கு உத்வேகம் அளித்தார். பகவான் மகாவீரருக்குப் பிறகு முதல் தர்க்கவாதி இவர்கள் என்று நாம் அறிவித்தால் அது மிகையாகாது. ஆசார்ய திரு சமந்தபத்திர அடிகளிடம் பல சிறந்த குணங்களில், இந்த நான்கு குணங்கள் - கவித்திறன், கமகத்வம், வாக்மித்வம் மற்றும் வாதித்வம் மிகவும் முக்கியமானவை. வாதி (வாத-விவாதங்களில் வல்லவர்), கமகர் (மற்ற அறிஞர்களின் படைப்புகளைத் தாமாகவே புரிந்துகொண்டு மற்றவர்களுக்கு விளக்கக் கூடிய திறனுடைமை), மற்றும் வாக்மி (சொல்வன்மையில் சிறப்பு) எனவாம். அதனால் தான் பகவத் ஸ்ரீ ஜினசேனாசாரிய அடிகள் ஸ்ரீ ஆதிபுராணத்தில் இங்ஙனம் துதித்துப்போற்றினர்:

***கவீனாம் க$_3$மகானாம் ச வாதீ$_3$னாம் வாக்$_3$மிநாமபி । யஶ: ஸாமந்தப$_4$த்$_3$ரீயம் மூர்த்$_4$னி சூடா$_3$மணீயதே* ॥ ஆதி புராணம் முதல் பர்வம்** 44 ॥

பெரியோர்கள் தம் தலையில் சூடும் சூடாமணியாகவும் மூர்த்னி அதாவது ஈடிணையற்ற மூதறிஞர் எனவும் போற்றப்பெற்றவர்.

யாப்பிலக்கணத்தில் தொடை எனவழங்கப்படும் செய்யுள் உறுப்பு வகைகளில் எதுகை முக்கியமானதாகும்.வெவ்வேறு அடிகளின் அல்லது சீர்களின் இரண்டாவது எழுத்துக்கள் ஒத்துவருதல் எதுகை ஆகும். இத்துதிப்பாவில் எதுகைகள் நிறைந்துள்ளன. இதில் அனந்தரபாத முரஜபந்தம் அணிந்துள்ளது.

இந்த அணியில் முதலிரண்டு அடிகளில் மற்றும் இறுதி அடிகளில் கீழ்க்காணும் சித்திர அமைப்பு வருகிறது.

முதல் வரி

அ		**ஷி**		**ஸு**		**லோ**	
	பி$_4$		**க்த:**		**ரைர்**		**கை**
ஸ்த்ரி		**ப$_4$**		**ப**		**ந**	

இரண்டாம் **வரி**

வா		**ம**		**ஶே**	
	ஸுபூஜ்ய:		**யீ**		**ஶ:**
ஸ்த்வம்		**க**		**த்$_3$ரு**	

சார்வஸ்யைவ க்ரமே஽ஜஸ்ய துங்க$_3$: ஸாயோ நமன்னபா$_4$த் ।

ஸர்வதோ வக்த்ரமேகாஸ்யமங்க$_3$ம் சா$_2$யோநமப்யபா$_4$த் ||49||

चार्वस्यैव क्रमेऽजस्य तुंगः सायो नमन्नभात् ।
सर्वतो वक्त्रमेकास्यमंगं छायोनमप्यभात् ॥४९॥

பதவுரை:

அஜஸ்ய ஏவ ஸர்வஜ்ஞ பகவானின்
க்ரமே திருவடிகளை
நமன் சேவிக்கின்ற பவ்யர்களும் அவரைப் போன்றே

12. ஸ்ரீ வாஸுபூஜ்ய ஜினஸ்துதி:

அபி$_4$ஷிக்த: ஸுரைர்லோகைஸ்த்ரிபி$_4$ப$_4$க்த: பரைர்ந கை: ।

வாஸுபூஜ்ய மயீஸேஸஸ்த்வம் ஸுபூஜ்ய: கயீத்$_3$ருஸ: ॥48॥

(அனந்தரபாத$_3$முரஜப$_3$ந்த$_4$:)

अभिषिक्तः सुरैर्लोकैस्त्रिभिर्भक्तः परैर्न कैः ।
वासुपूज्य मयीशेशस्त्वं सुपूज्यः कयीदृशः[1] ॥४८॥

பதவுரை:

வாஸுபூஜ்ய:	வாஸுபூஜ்ய தீர்த்தங்கரரே! தாங்கள் அவதரித்த போது
ஸுரை:	நான்குவித தேவர்களும் சேர்ந்து
அபி$_4$ஷிக்த:	மேருமலையில் அபிஷேகம் செய்தனர்!
த்ரிபி$_4$: லோகை:	அன்று முதல் மூவுலகத்திலிருக்கின்ற
ப$_4$க்த:	பக்தர்களில் தங்களை
பரை: கை: ந	துதித்து வணங்காதவர்கள் யாரும் இல்லை!
மயீ	எனக்கு
த்வம்	தாங்கள் ஒருவரே
ஈஸேஸ	இதயத்தில் வீற்றிருக்கும் இறைவன்!
க: ஈத்$_3$ருஸ:	எனவே தங்களைத் தவிர வேறு யார் எனக்கு
ஸுபூஜ்ய:	பூஜிக்கத்தக்கவராக இருக்க முடியும்?

விளக்கவுரை:

வாசுபூஜ்யரே ! நால்வகைத்தேவர்கள் ஜிநபாலகனாகிய தங்களை ஸுதர்ஸன மேரு மலையின் உச்சியில் பாண்டுக ஸிலாவில் மிகவும் சிறப்பாக பாற்கடல் தூய நீரால் அபிஷேகம் செய்து தம்மை அலங்கரித்து கீத சங்கீத நடனங்களுடன் பலவாறு துதித்து மகிழ்ந்தனர். அன்றிலிருந்து தம்மை வணங்காத நற்பவ்யர் யாருமில்லை. எனக்கு நீங்கள் ஒருவரே இதயத்தில் வீற்றிருக்கும் இறைவன்! வேறு யார் எனக்கு வணங்கத்தக்கவராக இருக்க முடியும்? முடியாது என்பதாம்.

பாலயதி ஐவரில் இந்த தீர்த்தங்கரர் முதல்வராவர்.

பகவான் மகாவீரரின் போதனையை மனித சமுதாயம் ஒருங்கிணைந்து உயர சர்வோதயம் என்ற மந்திரத்தை-தந்திரத்தை தனிஒரு சொல்லாக படைத்தளித்த தீர்க்க தரிசி மிகவும் பணிவிற்குரிய ஆசான். அடிகளது திருவாய்மொழி (*வீரஸ்யேவ விஜ்ரும்ப$_4$தே* ॥29॥) பகவான் மகாவீரரின் திருமொழியை ஒப்ப கர்ஜனை செய்தது என **தவத்திரு இரண்டாம் ஜிநஸேனாசார்யர்** அடிகள் தமது **"ஹரிவம்ஸபுராணத்தில்"** பறை சாற்றினர். நாடு நாடாக பாதயாத்திரை செய்து அறியாமை இருளை அகற்ற அவர்கள் செய்த திருவறப்பணி வரலாற்றில் பொன்னெழுத்தால் பதிந்துள்ளது.

அவர்கள் படைத்த நூல்களில் தற்போது வடமொழியில் கிடைத்துள்ள நூல்களாவன: திரு இரத்தினகரண்டக சிராவகாசாரம். திரு ஆப்த மீமாம்சா, திரு யுக்தி அனுஸாஸனம், திரு ஸ்வயம்பு தோத்திரம் மற்றும் திரு ஸ்துதி வித்யா.

திரு ஸ்துதிவித்யா அறிமுகம்:

இந்நூலின் முதற்பெயர் 'ஸ்துதிவித்யா' என முதல் துதிப்பாவிலிருந்து அறிகிறோம். ஸம்ஸ்க்ருத புகழாரத்திலிருந்து (பிரஸஸ்தி) இதன் மறுபெயர் '**ஜினஸ்துதிஸதகம்**' என தெரிய வருகிறது. இந்நூல் பலவிதமான அணிகளால் அலங்கரிக்கப் பெற்றுள்ளது. சுவடிகளின் பல பிரதிகளில் இதனை 'ஜினஸதாலங்காரம் என்ற புகழ்ப்பெயராலும் குறிப்பிடப்பட்டுள்ளது, எனவே இங்ஙனம் நாற்றிசையிலும் இசை பரவியுள்ள இந்நூலுக்கு பண்புகட்கேற்ப நேர்ந்த நான்கு பெயர்கள் மிகவும் பொருத்தமே என்க.

எழுத்தணி, சொல்லணி, பொருளணி, ஓவிய அணி எனப் பலவாக அலங்கரிக்கப்பட்டதனால் உரைகாரர் தவத்திரு ஆசார்யர் வசுநந்தி அடிகள் இந்நூலை *'ஸர்வாலங்காரபூஷிதா'*

எனவும் ***'சமஸ்தகுணகணோபேதம்'*** அதாவது குணக்களஞ்சியம் எனவும் மனமாரப் புகழ்ந்து போற்றியுள்ளார். இது மிகையன்று. இந்தப் புதிரான நூல் தவத்திரு ஆசான் ஸமந்தபத்திரரின் தனித்துவமான கவிதைத் திறன்களையும், அற்புதமான இலக்கணம் மற்றும் இலக்கியப் புலமையையும், சொற்களின் ஈடிணையற்ற தேர்ச்சியையும் பிரதிபலிக்கிறது. *'யோகினாமபி துஷ்கரா'* - யோகிகளால் கூட எளிதில் புரிந்து கொள்ளமுடியா என இதன் அருமையை உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார், மேலும் இந்த படைப்பை ***'சத்குணதாரா'*** (நல்ல குணங்களின் அடிப்படை) என்றும் ***'சுபத்மினீ'*** (சிறந்த தாமரைக்கொத்து) என்றும் வருணித்துள்ளார். நல்ல தாமரையைப்போல இதன் துதிப்பாக்கள் மென்மை, நறுமணம் மற்றும் அழகு ஆகியவைகளால் நிறைந்துள்ளது.

இந்நூலில் அறுநால்வர் துதி, சித்தபக்தி புங்கவன் பயந்த நன்னூல் பக்தி மற்றும் உறுதி பாக்கள் (epilogue) என 116 பாசுரங்கள் உள்ளன. ஒவ்வொரு பாசுரத்திலும் குறைந்த அளவு ஓரணி பயின்று வந்து சோபிக்கிறது பல பாக்களில் ஒன்றுக்கும் மேலான அணிகள் நிறைந்துள்ளன. தவத்திரு ஆசானுக்கு முன்பு இவ்வாறு யாப்பணியுடைய எந்த வகையான சுலோகங்கள் கிடைக்கவில்லை. தமிழில் யாப்பணிகள் அதிகம். தமிழ்ப்புலமை காரணமாக ஆசான் இங்ஙனம் வடமொழியில் இம்முறையை முதன்முறையாக உருவாக்கினர் போலும் என மொழி வித்தகர்களின் முடிபு.

ஆசானின் இந்நூலை காலவாக்கில் அறிவார் அரிதாயினர். எனினும் இதனை அழியாமல் காத்து வந்தனர். **திரு நரசிங்கம்** என்ற வித்துவான் இதன் அருமை பெருமைகளை வெளிக்கொணர்ந்தார். அதற்கு சில நூறு ஆண்டுகட்கு பிறகு தவத்திரு **ஆசார்யர் வசுநந்தி** அவர்கள் எளிய உரையை எழுதியளித்தனர். இந்நூலின் யாப்பணிகளை மேற்கோட்களாக அலங்கார சிந்தாமணி எடுத்து விளக்குகிறது.

அபி$_4$யம்	ஸம்ஸார பயமும் நீங்குவதால்
மா	என்னையும் அவ்விதமே
அவ	ரக்ஷிக்கும்
அபராக	பரமான்மா தாங்களே ஆவீர்!

விளக்கவுரை:

வேண்டுதல் வேண்டாமையிலானே! வாலறிவனே! அமரர் நரர் வான்நரர் (விஞ்சையர்) விலங்கு ஆகிய அனைவருக்கும் அடைக்கலம் தரவல்லவர். அவர்கட்குத் திருப்பணி செய்கின்றனர். அனைவரும் தங்கள் திருவறத்தில் ஆர்வம் உள்ளவர்கள். தாங்கள் இயல்பாகவே அனைவருக்கும் நன்மை செய்பவர், தங்களிடம் அடைக்கலமான பக்தர்கள் பயந்தெளிந்து அச்சமின்றி, மகிழ்ச்சியில் திளைக்கிறார்கள். நீங்கள் மோகராகம், துவர்ப்பசை ஆகியவற்றிலிருந்து விடுபட்டுள்ளீர்கள். தங்கள் தரிசனத்தால் ஆரோக்கியமும் அச்சமின்மையும் அடைந்தேன். ஸ்ரேய நாதரே! தங்களை திரிகரண சுத்தியுடன் வணங்குகிறோம். எம்மைக் பாதுகாப்பீராக. பரமான்மனை அணுகுவர் மல மாசுகள் அச்சம் அவா வெகுளி முதலிய துவர்ப்பசைகள் நீங்கி பரமான்மா ஆகிறார்.

இந்த இரு திருப்பாக்கள் குளகம் மற்றும் ஸ்லோக யமகம் என இரு அணிகளைப் பெற்றுள்ளன. முதல் திருப்பாவில் உள்ள எழுத்து வரிசையே 47-ஆவது துதிப்பாவிலும் அமைந்துள்ளது. எனினும் எழுத்துக்களைப் பிரித்தோ அல்லது சேர்த்தோ அமைத்து பொருள் வேறுபாட்டை ஏற்படுத்தினர். இந்த நுட்பத்தைத் திருப்பாக்களையும் பதவுரையையும் ஒப்பிட்டு அறிக.

அபராக$_3$ ஸமாஸ்ரேயன்னநாம யமிதோபி$_4$யம் ।

விதா$_3$ர்ய ஸஹிதாவார்ய! ஸமுத்ஸன்னஜ வாஜித: ॥46॥

அபராக$_3$ ஸ மா ஸ்ரேயன்னநாமயமிதோபி$_4$யம் ।

விதா$_3$ர்யஸஹிதாவார்ய! ஸமுத்ஸன்னஜவாஜித: ॥47॥

(ஸ்லோகயமக: & யுக்$_3$மம்]

अपराग! समाश्रेयन्नानाम यमितोभियम् । विदार्य सहितावार्य! समुत्सन्नज! वाजित: ॥४६॥	अपराग! स मा श्रेयन्नानामयमितोभियम् । विदार्यसहितावार्य! समुत्सन्नजवाजित: ॥४७॥

பதவுரை:

அபராக	வேண்டுதல் வேண்டாமை இல்லா வீதராக பரமேஷ்டியே!
அஜ:	வாலறிவரே!
ஸஹிதாவார்ய!	ஸுரேந்திர நரேந்திர முனீந்திரரும் சூழ
யம்	தங்களை
இத:	சரணடைந்ததால்
ப$_4$யம் விதா$_3$ர்ய	ஸம்ஸார பயம் நீங்கி
ஸமுத்ஸன்	ஆனந்தமாகி
வாஜித:	மெய்சிலிர்க்க
ஸமாஸ்ரேயம்	ஸம்யக்த்வ ரூபமாக திரிகரண ஸுத்தியுடன் தங்கள் சேவடிகளை
நநாம	வணங்குகின்றார்கள் !
அபராக	யாதொரு மோஹனீய கர்மங்களும் இல்லாத
ஶ்ரேயன்	ஸ்ரேயாம்ஸ நாத ஜிநேஸ்வரரே!
விதா$_3$ர்ய ஸஹித:	பல வித ஸாது கணங்களோடு சூழப்பட்ட
ஆர்ய!	உத்தமரே!
ஆஜித	தாங்கள் அவா வெகுளி முதலிய வினைப் பகைவர்களை
ஸமுத்ஸன்னஜவ	வென்றவர் ஆதலால்
இத:	தங்களை தரிஸனம் செய்த மாத்திரத்தில்
ஸ	அனைத்து ஜீவன்களுக்கும்
அனாமயம்	ஆரோக்கியமும்

முதன் முதலில் **"ஜிநஸதகம்"** என்ற பெயரில் பொது ஊழி 1912-இல் பதிப்பிக்கப்பெற்றது. இதற்குப் பிறகு மூன்று பதிப்புகள் முறையே 1950, 2001 மற்றும் 2020-ஆம் ஆண்டுகளில் வெளியிடப் பெற்றன. இந்நூலை 2020- இல் ஜைந ஒலியிசை வழிபாடு (Jain Audio Prayers) என்ற வாட்ஸ்அப் குழுவில் சுவாத்தியாயம் நிகழ்ந்தது.

இந்நூலின் அருமை-பெருமைகளில் மனங்கவர்ந்த நற்பவ்யர்கள் திருமதி கவிதா சஞ்ஜெயந்தன் மற்றும் கம்சலாதேவி செந்தில்குமார் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க மூநால்வர் (12) தீர்த்தங்கர துதிகள் வரை முதல் பாகமாக தற்சமயம் வெளியிடப்படுகிறது. நூலைப்பதிப்பிற்க முன்வந்த அந்த திரு நிறைந்த குடும்பத்தினர்க்கும், அச்சுத்தேரேற்றி அளித்த திருமிகு பேரணி ஸ்ரீதரனாருக்கும் தமிழாக்கக்குழுவினர் பெரும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பணிவிற்குரிய ஆசான் தமது முதிர்ந்த முனி ஒழுக்க நிலையில் இந்நூலை நமது சுதபத பயிற்சிக்காக யாத்தருளினர். சம்ஸ்கிருத உரையாசான் (*க$_4$னகடி$_2$னகா$_4$திகர்மேந்த$_4$னத$_3$ஹனஸமர்தா$_2$யா:*) கூறியது போல இத்திருப்பாக்கள் ஆழ்ந்து ஊர்ந்து பயில்வதால் நமது பெருமலையனைய காதிப்பெரும்பகையை இடித்துத் தகர வைக்கும் வலிமையுடையதாகும். அதனால் ஒவ்வொரு துதிப்பாவையும் ஓவிய வடிவில் எழுதிப்பயிலுமாறு பவ்யர்களை விண்ணப்பித்துக்கொள்கிறோம். நூலைப்படித்துக் குணம் நாடி, நேர்ந்த குற்றங்களை தமது பெருந்தன்மையால் திருவளர்க்குமாறும் தனிப்பட்ட முறையில் எங்கட்குத் தெரிவிக்குமாறும் வேண்டுவம்.

இவண்

ஜனவரி 2024 **நூல் தமிழாக்கக் குழுவினர்**

கவி கமகி வாதி வாக்மீ முதலிய சிறப்புகளால் கௌரவிக்கப்பெற்ற தவத்திரு ஆசார்யஸ்ரீ ஸமந்தபத்ர அடிகளால் இயற்றியருளிய **ஸ்ரீ ஜிநஸதாலங்காரம்** அல்லது **ஸ்ரீ ஜிநஸதகம்** எனும்

ஸ்ரீ ஸ்துதிவித்$_{3}$யா

பாயிரம்

<u>துதிநூற்பெயர் மற்றும் பயன்</u>

ஸ்ரீமஜ்ஜின பதா$_{3}$ப்$_{4}$யாஸம் ப்ரதிபத்$_{3}$யாக$_{3}$ஸாம் ஜயே |
காமஸ்தா$_{2}$ன ப்ரதா$_{3}$னேஸம் ஸ்துதிவித்$_{3}$யாம் ப்ரஸாத$_{4}$யே ||1||

(முரஜபந்த அணி)

श्रीमज्जिनपदाऽभ्याशं प्रतिपद्याऽऽगसां जये ।
कामस्थानप्रदानेशं स्तुतिविद्यां प्रसाधये ॥१॥

<u>பதவுரை:</u>

ஸ்ரீமத்	அனந்த நவகேவல லப்தி முதலிய அந்தரங்க இலக்குமிகளையும் சமவசரணம் முதலிய வெளிப்புறமான இலக்குமிகளையும் சேர்ந்திருக்கும்
ஜின	அருகனின்
பதா$_{3}$ப்$_{4}$யாஸம்	சேவடிகளை அடிக்கடி வணங்கியும் துதித்தும் அருகனால் அருளப்பெற்ற சுதபதங்களை பலவாறாக பயிற்சி செய்தலால்
ப்ரதிபத்$_{3}$யாக$_{3}$ஸாம்	வினைகளாகிய பாவங்களை
ஜயே	வெல்லவும்
காமஸ்தா$_{2}$ன	மிகவும் இஷ்டமாகிய சுவர்க, அபவர்க முக்தி பதவிகளை
ப்ரதா$_{3}$னேஸம்	பெறுவதற்காகவும்
ஸ்துதிவித்$_{3}$யாம்	ஸ்துதிவித்யா என்ற தந்திரத்தை, மந்திரத்தை, திறமாக துதிக்கும் கலையை
ப்ரஸாத$_{4}$யே	ஆழமான ஸாதனையைச்செய்து இந்நூலை இயற்றியருளுகிறேன்.

<u>சம்ஸ்க்ருதவுரை:</u>

அஸ்ய விவரணம் க்ரியதே । ஸ்ரீவித்$_{3}$யதே யஸ்ய ஸ ஸ்ரீமான் ஜினஸ்ய பதா$_{3}$ப்$_{4}$யாஸ: பத$_{3}$ஸமீபம் ஜினபதா$_{3}$ப்$_{4}$யாஸ: ஸ்ரீமாம்ஸ்சாஸௌ ஜினபதா$_{3}$ப்$_{4}$யாஸஸ்ச ஸ்ரீமஜ்ஜினபதா$_{3}$ம்யாஸஸ்தம் ஸ்ரீமஜ்ஜினபதா$_{3}$ப்$_{4}$யாஸம் । ப்ரதிபத்$_{3}$ய ஸம்ப்ராப்ய

தீர்த்தங்கரர்கட்கு பத்து காதி கர்ம க்ஷயாதிஸயங்கள் தோன்றும். இந்த விவரங்களை மே. ம. பு. 1192, 1193- ஆம் செய்யுளிலும் ஸ்ரீ நந்தீஸ்வர பக்தியின் துதிகள் முறையே 40-44 வழி மேலும் அறிக. இங்ஙனம் தீர்த்தங்கர பெருமானின் அளப்பரிய மாபெரும் வனப்பை முற்றிலும் வருணிக்க முடியாது என்க.

இந்த துதியில் உத்ப்ரேக்ஷா அணி கையாளப்பட்டதாக உரைகாரரின் ஊகம். இதனைத் தமிழில் தற்குறிப்பேற்ற உவமை அல்லது நோக்குவமை என்ப. ஒருபொருளின் இயற்கை நிகழ்ச்சிகளைக் கவி தானே கற்பனை செய்து பிறிது ஒக்க. நிகழ்ச்சிகளோடு ஒப்பிடுதல் தற்குறிப்பேற்ற உவமையாம். ஈண்டு பகவானின் சேவடிகளை உவமை காட்டாது குறிப்பு நோக்கோடு வருணித்துருளினர். அதனால் இந்த அணி தோன்றியது.

கீழ்க்காணும் திருப்பாவை முரஜபந்த சித்திர அமைப்புள் நிரப்பவும்:

ஆலோக்ய சாரு லாவண்யம் பதால்லாதுமிவோர்ஜிதம் |
த்ரிலோகீ சாகி$_{2}$லா புண்யம் முதா$_{3}$ தா$_{3}$தும் த்$_{4}$ருவோதிதம் ||45||



(நநாமி) வணங்குகிறேன்

விளக்கவுரை:

அருகன் பூமாலை முதலாய புனையாத திருமூர்த்தி (மே ம பு 64) யாகின் அவர் காண அழகன்றோ? என்ற ஐயத்தை இத்துதிப்பா நிராகரிக்கிறது. மகிழ்ச்சியுடன் புண்ணியத்தை அளிக்கும் நித்யோதயனான இறைவனே! தங்களின் ஒப்புவமையில்லாத திவ்ய அழகை தாமும் பெறவே தேவர்கள் உட்பட மூவுலக உயிர்கள் தங்களின் ஸ்ரீ சரணத்தை இடைவிடாமல் வணங்குகின்றனர் போலும்.

அருகப்பெருமானின் உடலமைப்பு, உத்தமமான திருவினை பரமாணு நிறைந்த வர்கணைகளால் நிர்மாணிக்கப்பெறுகிறது. அதனால் மூவுலகில் அவருக்கொப்ப யாரும் அவர் காலத்தில் இருந்ததில்லை. இவ்வுண்மையை ஸ்ரீ பக்தாமரம் 12-ஆம் துதி நினைவூட்டுகிறது. இந்நூலின் பல திருப்பாக்களில் பகவானின் லாவண்யத்தை வர்ணிக்கிறது. குறிப்பாக 38--ஆம் துதியில் *சாருஸ்ரீஶுப$_4$தௌ$_3$ ...ருசா வ்ருத்$_3$தௌ$_4$ ப்ரபாவனௌ ஸ்ரீவ்ருத்$_3$தௌ$_4$தௌ ஶிவௌ ஶுத்$_3$தௌ பாதௌ$_3$* என மிக பொருள் செழிப்பாக வருணிப்பதை நினைவு கூர்க.

தமிழ் இலக்கியங்களில் அருகனை . திருமறுவாய்த் திகழ்கின்ற திருமூர்த்தி (மே. ம. பு. 1191.)

செம்பொன் வரை மேல் பசும் பொன் எழுத்து இட்டதே போல்
அம்பொன் பிதிர்வின் மறு ஆயிரத்து எட்டு அணிந்து
வெம்பும் சுடரின் சுடரும் திருமூர்த்தி (சீ. சி. 2)

பத்மம், சங்கம், மத்ஸ்யம், ஸ்ரீவத்ஸம், ஸ்வஸ்திகம், நந்தியாவர்த்தம் முதலிய இரேகைகள் நூற்றெட்டும், மசூரிகை முதலிய அடையாளங்கள் தொள்ளாயிரமும் ஆக மறுக்கள் ஆயிரத்தெட்டு சின்னங்கள் நிறைந்தமைந்த திருமேனி! திருமறுவுவலனணிந்து திகழ்கின்ற திருமூர்த்தி!(சூளாமணி184) திருமறு மார்பினை! என பலவாறாக போற்றியுள்ளனர். இதற்கு மேலும் பகவானுக்கு இயல்பான அதிசயங்கள் பத்தாவன. பதின்மூன்றாம் குண ஸ்தானத்தில்

ப்ரதிபத்$_3$யதி ப்ரதி பூர்வஸ்ய பதே$_3$: க்த்வதிஸ்ய ப்ரயோக$_3$: । ஆக$_3$ஸாம் பாபானாம் ஜயே ஜயஹேதோநிமித்தே இவியம் । காமம் இஷ்டம் கமனீயம் இச்சா$_2$ வா ஸ்தா$_2$னம் நிவாஸ: காமம் ச தத்ஸ்தா$_2$னம் ச காமஸ்ய வா ஸ்தா$_2$னம் காமஸ்தா$_2$னம் தஸ்ய ப்ரதா$_3$னம் காமஸ்தா$_2$னப்ரதா$_3$னம் அத$_2$வா காமம்ச ஸ்தா$_2$னம் ச காமஸ்தா$_2$னே தயோ: ப்ரதா$_3$னம் காமஸ்தா$_2$னப்ரதா$_3$னம் தஸ்ய ஈஶ: காமஸ்தா$_2$னப்ரதா$_3$னேஶ: தம் காமஸ்தா$_2$னப்ரதா$_3$னேஶம், ப்ரத$_2$மபாதே$_3$ன ஸஹ ஸம்ப$_3$ந்த$_4$: । ஸ்துதிரேவ விதா$_4$ ஸ்துதிவித்$_3$யா தாம் ப்ரஸாத$_4$யே அஹமிதி ஸம்ப$_3$ந்த$_4$: । அத$_2$வா காமஸ்தா$_2$னப்ரதா$_3$னேஶமிதி ஸ்துதிவித்$_3$யாயா விஶேஷணம், காமஸ்தா$_2$னப்ரதா$_3$னஸ்ய ஈஷ்ட இதி காமஸ்தா$_2$னப்ரதா$_3$னேட அதஸ்தாம் । கிமுக்தம் ப$_4$வதி-ஸ்ரீமஜ்ஜினபதா$_3$ப்$_4$யாஶம் ப்ரதிபத்$_3$ய ஸ்துதிவித்$_3$யா ப்ரஸாத$_4$யே(அ)ஹம் கிம் விஶிஷ்டோம் ஸ்துதிவித்$_3$யாம் கத$_2$ம் பூ$_4$தம் வா ஜினபதா$_3$ப்$_4$யாஶம் காமஸ்தா$_2$னப்ரதா$_3$னேஶம் । பி$_2$மர்த$_2$ ஆக$_3$ஸாம் ஜயே ஜயநிமித்தம் । ப்ரஸாத$_4$யே இதி ச ப்ரபூர்வஸ்யஸாத$_4$ ஸம்ஸித்$_3$தா$_4$வித்யஸ்ய தோ$_4$: ணிஜலட$_3$ந்தஸ்ய ப்ரயோக$_3$: ‖1‖

விளக்கவுரை:

"பக்தர்களின் அனைத்து மனோரதங்களையும் நிறைவேற்றும் ஸ்ரீ ஜினேந்திரதேவனின் பாத தாமரைகளுக்கு அருகில் சென்று எனது பாவங்களை அழிக்கும் வகையில் ஸ்ரீ ஜினேந்திரதேவனின் இந்த துதிப்பாடலை ஆரம்பிக்கிறேன்".

துதி வடிவில் ஞானத்தை அடைவதில் முறையாக ஈடுபடுவதன் மூலம், நேரும் சுப பரிணாமத்தால் ஒருவன் பாவங்களின் மீது வெற்றி பெறுகிறான், அதன் பலனாக இஷ்டஸ்தானத்தை அடைவது கூடும். அதனால் தான் ஸ்வாமி சமந்தபத்ரர் அவர்கள், ஜினேந்திரதேவரின் வீதராகமூர்த்தியின் முன்பாகச் சென்று அவரைப் போற்றிப் புகழ்ந்தார் மற்றும் தமது இதயக் கோவிலில் அவரை வீற்றிருக்க வைத்துப் போற்றினார். ஆயிரத்தெட்டு திருநாமங்களில் முதல் திருநாமம் ஸ்ரீமான் எனப் பெறும். தமிழில் திரு என்ற பண்புத்தொகை பகவனின் வைபவத்தைக் குறிக்கும். ஆழமான ஸாதனையைச்செய்து இந்நூலை இயற்றியருளுகிறேன். ஜிநபதமும் சுதபதமும் தர்மத்யானத்தில் முதலிரண்டு சுக்லத்யானத்தில் கையாளப்படுகின்றன. ஸ்ரீ தத்த்வார்த்த சூத்திரம் ஒன்பதாம் அத்தியாயத்தின் *ஏகாஶ்ரயே ஸவிதர்க-வீசாரே பூர்வே* ‖ 41 ‖ *அவீசாரம் த்$_3$விதீயம்* ‖ 42 ‖ *விதர்க: ஶ்ருதம்* ‖ 43 ‖ என்ற சூத்திரங்களின் தாத்பர்யம் இதுவே. ஐந்தாம் காலத்தில்

ஜிநவழிபாடு மற்றும் சுதப்பயிற்சி மிகவும் உபயோகமாகும். அதனால் பரமபூஜ்ய ஆசார்ய ஸ்ரீ ஸமந்தபத்திர அடிகள் திருத்துதி வித்யாவை நமக்கு பிரஸாதமாக, ஸாதனை தந்திரமாக, அருளினர்.

முரஜபந்த அணி இந்த அணியின் மறு பெயர் மிருதங்க சித்திரப்பா ஆகும். கீழ்க்காணும் படத்தில் இந்த துதிப்பா வரையப்பெற்றுள்ளது. மேள வாத்தியத்தில் கயிறு வழியில் இத்துதியின் ஈரடிகள் எழுதப்பட்டது. ஈரடிக்கு இடையில் உள்ள சமமான எழுத்துக்கள் மத்தியில் அமைந்தன. மூத்திரம் செய்து கொண்டே நடந்து செல்லும் பசு மூத்திரம் வளைந்து தென்படும். அது போல இத்துதிப்பாவும் வளைந்து வளைந்து தெரிகிறது. அதனால் இத்துதிப்பாவிற்கு கோமூத்திர சித்திர அணி எனக் கூறுப. மிகவும் பணிவிற்குரிய தவத்திரு ஆசார்யர் ஸமந்தபத்ரர் அவர்கள் இந்த சித்திரப்பா அணியை பல துதிப்பாக்களில் யாத்தருளினார். இதனை நூல் பயில பயில தெரியவரும்.



முரஜபந்த அணி

அவிவேகோ ந வா ஜாது விபூ$_4$ஷாபன்மநோருஜா |
வேஷா மாயாஜ வைநோ வா கோபயாக$_3$ஸ்ச ஜன்ம ந || 44||



ஆலோக்ய சாரு லாவண்யம் பதால்லாதுமிவோர்ஜிதம் |

த்ரிலோகீ சாகி$_2$லா புண்யம் முதா$_3$ தா$_3$தும் த்$_4$ருவோதிதம் ||45||

(मुरजबन्धः)

आलोक्य चारु लावण्यं पदाल्लातुमिवोर्जितम् ।
त्रिलोकी चाखिला पुण्यं मुदा दातुं ध्रुवोदितम् ॥४५॥

பதவுரை:

முதா$_3$	மிகவும் மகிழ்வுடன்
புண்யம்	புண்ணியத்தை
தா$_3$தும்	அளிக்கும்
த்$_4$ருவோதிதம்	நித்யோதயமாக
வோர்ஜிதம்	தங்களின் பரந்துபட்ட ஒப்பில்லாத
சாரு	மனதைக் கவரும் உன்னத
லாவண்யம்	அழகினைப்
ஆலோக்ய	பார்த்த பவ்யர்கள்
பதாத்	தங்கள் சேவடிகளை
லாது	அவ்வழகினைப் பெறுவதற்காகவே
இவ	போலும்
ச	விசேஷமான ஆழ்ந்த பக்தியுடன்
அகி$_2$லா	அனைத்து ஜீவன்களும்
த்ரிலோகீ	மூவுகிலும் இருக்கின்ற

சிரத்திரள் நான்கிலன் ஐம்படை ஏந்திலன் திண் சிலையால்

புரத்தியம் களையும் பொடி ஆக்கிலன் போதி என்(று) ஓர்

மரத்திரள் சேர்த்து பல் மாயம் சொல்லான் எந்தை.... (திருநூற்றந்தாதி)

அணியாதும் ஒளிதிகழும் ஆரணங்கு திருமூர்த்தி!

பகைநாறுமயிற்படைகள் பயிலாத திருமூர்த்தி! படையொன்றும் இல்லை அணியில்லை என தமிழ் இலக்கியங்களில் பலவாறாக அருகனை வாழ்த்தியுள்ளனர்.

வடமொழி தோத்திரங்களில் இந்த வர்ணனைகள் மிகப்பல. எடுத்துக்காட்டாக *வபுர்பூ4ஷாவேஷவ்யவதி4ரஹிதம் ஶாந்தகரணம் யதஸ்தே ஸஞ்சஷ்டே ஸ்மரஶரவிஷாதங்கவிஜயம் |*

விநா பீ4மை: ஶஸ்த்ரைரத3யஹ்ருத3யாமர்ஷவிளயம் ததஸ்த்வம் நிர்மோஹ: ஶரணமஸி ந: ஶாந்திநிலய: || (**ஸ்ரீ சுயம்பு தோத்திரம்** 21-5-120)

ஸர்வாங்கே3ஷு த்வமஸி ஶுப4க3ஸ்த்வம் ந ஶக்ய பரேஷாம், தத்கிம் பூ4ஷாவஸநகுஸுமை: கிஞ்ச ஶஸ்த்ரைருத3ஸ்த்ரை:| ***ஏகீபாவம்*** 9||

நிராப4ரண பா4ஸுரம் விக3த ராக3வேகோ3த3யாத், நிரம்ப3ர மநோஹரம் ப்ரக்ருதிரூபநிதோ3ஷத: |நிராயுத4 ஸுநிர்ப4யம் விக3த ஹிம்ஸ்ய ஹிம்ஸாக்ரமாத்.....|| **ஸ்ரீ சைத்ய பக்தி** 32||

விக3தாயுத4விக்ரியாவிபூ4ஷா:, ப்ரக்ருதிஸ்தா2 க்ருதிநாமஜிநேஶ்வராணாம் |ப்ரதிமா:ப்ரதிமாக்3ருஹேஷுகாந்த்யா(அ)ப்ரதிமா: கல்மஷஶாந்தயே(அ)பி4வந்தே3 / **நந்தீஸ்வரபக்தி** 13 |

இதனை ஆதாரமாகக் கொண்டு உங்களைப் பின்பற்றுபவர்களுக்கு உலகில் காணும் பலவித வேறுபாடுகளை விகாரங்களை தம்முள் அகற்றி இறைவனின் உண்மை வடிவத்தை கோட்பாட்டைத் தெரிந்து தெளிந்து கொள்ள உதவும். உலகில் காணும் ஒவ்வொரு தெய்வத்தையும் தமது விவேகத்தால் சரியாக புரிந்து கொள்ள முடியும்.

இத்திருப்பாவும் **அர்த்தப்ரம** கட்டணியில் அமைந்துள்ளது.

ஜிநவாணி துதி

ஸ்நாத ஸ்வமல கம்பீரம் ஜிநாமித குணார்ணவம் |

பூத ஸ்ரீமஜ்ஜகத்ஸாரம் ஜநா: யாத க்ஷணாச்சிவம் ||2||

स्नात स्वमलगम्भीरं जिनामितगुणार्णवम् ।

पूतश्रीमज्जगत्सारं जनायात क्षणाच्छिवम् ॥२॥

இதன் பொருள்:

ஜநா: = பவ்யர்களே!

ஸ்வமல கம்பீரம் = மிகவும் அடர்ந்துள்ள அநாதி காலமாக கட்டுண்ட தத்தம் கன்மமலங்களைக்கழுவ நீக்க, **பூத** = மிகவும் தூய்மையானதும் **ஸ்ரீமஜ்ஜகத்ஸாரம்** = திருமகளின் நாமகளின் வாசமும் மூவுலகின் மெய்ப்பொருளின் ஸாரமும் ஆகிய

ஜிநாமித குணார்ணவம் = அனந்த நான்மையும் நவகேவல லப்தியுமாகிய அந்தரங்கமாகிய அக இலக்குமிகளும் எண் பெரும் சிறப்புகளுமுடைய சமவசரணமாகிய புறத்திருமகளும் மணந்த ஜிநேந்திரனின் திவ்யவொலியில் உருவாகிய ஜிநாகமக் குணக்கடலில் **ஸ்நாத**= நன்றாக குளிக்கவும். **க்ஷணாத்**= அக்கணமே **சிவம் யாத**= சித்த பதவியையடைக!

விளக்கவுரை

இதில் இரு அணிகள் உள, முரஜப3ந்தம் மற்றும் கோ3மூத்ரிகாப3ந்தம். இது மிருதங்கத்தை வேய்க்கும் கயிறு வடிவில் அணிக்கப்பெற்றது. இரண்டாவது வரிசையில் அமைந்துள்ள 'த'கரம், 'ம'கரம் முதலிய எழுத்துக்கள் முதல் மற்றும் மூன்றாம் வரிகட்குப் பொதுவாகும். கோ3மூத்ரிகாப3ந்தம் என்பது நடந்து செல்லும் கோமூத்திரம் போல வளைந்து காணும் தோற்றம்,

ஜினேந்திர குணக்கடலில் பக்தி-ஸ்நானம் செய்து, ஜினேந்திர குணங்களைத் தன் குணங்களாகக் கருதி பக்தியுடன் ஏற்றுக்கொண்டால், விரைவில் ஆன்மநலம் அடையும். இதன் காரணமாக திருவறக்கடலில் நீராடுவதற்கு- ஈடுபடுவதற்கு

ஆக்கமும் ஊக்கமும் தெளிவாகிறது. (கங்கையில் திவ்ய தீர்த்தமாக ஏற்று நீராடல் மூடநம்பிக்கையாகும்.)

நமக்கும் சித்தபரமேஷ்டிக்கும் இடையே உள்ள ஒரே சுவர் 'யான்,எனது' என்ற செருக்கு தான். ஜிந பதங்களாகிய நீரில் குளித்துக் கொண்டேயிருக்க வேண்டும். அவ்வாறு குளித்துக் கொண்டேயிருந்தால் தான் மல மாசுகள், கஷாயம், மோஹனீயம், அந்தராயம், ஆவரணம் முதலியன ஓடும்.



சித்த பக்தி

தி$_4$யா யே ஶ்ரிதயேதார்த்யா யானுபாயான்வராநதா꞉ ।
யே(அ)பாபா யாதபாரா யே ஶ்ரியா(ஆ)யாதானதன்வத ॥3॥

(அர்த்$_3$த$_4$ப்$_4$ரமகூ$_3$ட$_4$பஶ்சார்த்$_3$த$_4$ அணி)

धिया ये श्रितयेतार्त्या यानुपायान्वरानता꞉ ।
येऽपापा यातपारा ये श्रियाऽऽयातानतन्वत ॥३॥

பதவுரை:

இதார்த்யா யே தி$_4$யா	எவ்வித நோய்நொடிவின்றி எல்லையில்லா பண்புகளையுடைய கேவலஞான வாலறிவுடன் கூடியவரே!
ஶ்ரிதயே யானுபாயான்	தங்களையடைந்து
வரா; நதா;	பெரியோர்கள் வணங்குகின்றனர்.
யே(அ)பாபா	வினைகளைத்தையும் அழித்தவரே!
யாதபாரா	அளவிற்கரிய ஞானபாரத்தை சுமப்பவரே!

अविवेको न वा जातु विभूषापन्मनोरुजा ।
वेषा मायाज वैनो वा कोपयागश्च जन्म न ॥४४॥

பதவுரை:

அஜ:	வாலறிவரே!
ஜாது	தாங்கள் எப்போதும்
அவிவேக: ந	விவேகமில்லாதவராக இல்லை
ஆபத் மநோருஜா	தங்களிடம் உடல் மனம் தொடர்பான விகாரங்கள் இல்லை!
வேஷா ந வா	ஆடை அணிகலன்கள் போன்ற வேஷங்கள் இல்லை!
மாயா	வஞ்சகம் கபடம் போன்ற
இன:	பாபங்களோ
வா	மற்றும்
கோப:	குரோதங்களோ
ஆக	குற்றங்கள்
ஜன்ம:	மறுபிறவியோ
ந	இல்லை! அதனால் உண்மை ரூபமான தங்களை
நநாம	வணங்குவம்!

விளக்கவுரை:

எல்லாம் அறிந்த வாலறிவனே! தாங்கள் எப்போதும் அவிவேகனல்லர். தங்கள் உடம்பில் ஆடை உடை ஆபரணங்கள் நகைகள் ஆயுதங்கள் போன்ற வேஷங்கள் விகாரங்கள் இல்லை - உடல் வலி, மன வலி, பலவித வேஷங்கள், வஞ்சகம், பாவம், கோபம், குற்றம் மற்றும் மறு பிறப்பு முதலியன ஏதும் இல்லை - நீங்கள் எப்போதும் அறிவின் வடிவில் இருக்கிறீர்கள். உங்கள் ரூபமே சுரூபமமே கடவுளின் உண்மைத் தோற்றம்.

நநாம அதாவது வணங்குவம் என்ற தொழிற்பெயர் 46-ஆவது துதியிலிருந்து தழுவியது.

பூண் புனையாச்சங்கரன் மணி ஆபரணமும் மாசில்
வெண் தூசும் வம்(பு)ஆர் மலரும் அணியாத அழகிய அண்ணல் கண்டீர்

அதனால் இவரை ஆதி தீர்த்தனே என விளித்தார். இங்ஙனமே ஸ்ரீ ஶாந்தி தீர்த்தங்கரர் வரை ஒவ்வொருவரும் ஆதி தீர்த்தங்கரர் ஆவர்.

இந்த திருப்பாவில் மூவிதமான அணிகள் யாக்கப்பட்டுள்ளன. ஒன்று அர்த்தப்ரமம். அதாவது முதல் அணியின் முதல் நான்கெழுத்துக்களோடு அடிகளின் கடைசி எழுத்துக்களை கீழிலிருந்து மேலாக ஓத முதலடி பூர்த்தி ஆகும். அது போல மற்ற அடிகட்கும் அமையும். மூன்றாம் வனப்பு: நான்காவது அடிகளின் அனைத்து எழுத்துக்களும் முதல் மூன்று அணிகளிலிருந்து ஆளப்பட்டன. நிரௌஷ்டய விவரத்தை 38-ஆம் திருப்பாடலில் காண்க. அதனால் இந்த ஸ்லோகத்தில் .**அர்த்தப்ரம நிரௌஷ்டய கூடசதுர்த்தபாதம்** எனும் அலங்காரம் நிறைந்தது.

கீழ்க்காணும் அட்டவணையில் இந்த திருப்பாவை எழுதிப்பயிலுக!

ஹரதீஜ்யாஹிதா தாந்திம் ரக்ஷார்தா$_{2}$யஸ்ய நேதி$_{3}$தா ।
தீர்தா$_{2}$தே$_{3}$ ஶ்ரேயஸே நேதாஜ்யாய: ஶ்ரேயஸ்யயஸ்ய ஹி ॥43॥



அவிவேகோ ந வா ஜாது விபூ$_{4}$ஷாடபன்மநோருஜா।

வேஷா மாயாஜ வைநோ வா கோபயாக$_{3}$ஸ்ச ஜன்ம ந ॥ 44॥

(அர்த்$_{3}$த$_{4}$ப்$_{4}$ரம)

யே ஶ்ரியா	தங்களைச்சரணடைந்தோர்க்கு
ஆயாதான் அதன்வத	வாலறிவு முதலான இலக்குமிகளைச்சேர்க்கின்றீர்

விளக்கவுரை:

எவ்வித நோய்நொடியுமின்றி எல்லையில்லா பண்புகளையுடைய கேவலஞான வாலறிவுடன் கூடியவரே! தங்கட்கு திருப்பணி மேற்கொள்ள பெரியோர்கள் வணங்குகின்றனர்.

பாவமற்ற திருவுடையோனே! அளவிடற்கரிய ஞானபாரத்தை சுமப்பவரே! தங்களைச் சரணடைந்தோர்க்கு தமக்கு ஈடிணையான வாலறிவு முதலான இலக்குமிகளைச் சேர்க்கின்றீர்!

இந்த செய்யுளில் மூன்று அணிகள் உள்ளன. ஒன்று, அரைமறைவு (*அர்த்$_{3}$த$_{4}$ப்$_{4}$ரம*) அணி மற்றொன்று, இறுதியடி மறைவணி மற்றும் ஓவியவணி என்பன.

இணைத்துள்ள அட்டவணையைப் பார்க்கவும். சுலோகத்தின் நான்கு வரிகளும் தனித்தனி எழுத்தாக நான்கு வரிசைகளில் எழுதியுள்ளேன். அரைமறைவணியாவது: முதல் பத்தியை மேலேயிருந்து கீழாக படிக்கவும். முதல் பாதம் படிக்க முடியும். அங்ஙனமே படிப்பதைத் தொடர்ந்து எட்டாவது பத்தியில் உள்ள எழுத்துக்களை கீழே தொடங்கி மேல் நோக்கிப் படிக்கவும். இரண்டாவது பாதம் முடியும். இங்ஙனம் செய்யுளின் முதல் அடியைப் படிக்க முடியும். அங்ஙனமே, இரண்டு + ஏழு, மூன்று + ஆறு, நான்கு + ஐந்து பத்திகளையும் சேர்த்துப் படிக்க முறையே செய்யுளின் இரண்டாவது, மூன்றாவது மற்றும் கடைசி அடிகளைப் படிக்க இயலும். பாதங்களும் அடிகளும் அரை மறைவாக அமைவதால், இப்பா அரைமறை அணியாயிற்று. இறுதியடிமறைவணியாவது: முதல் இருவடிகளில் காணும் யே, பா, யா, ரா, த, ஸ்ரி, தா, ன், வ என்ற எழுத்துக்களே கடைசி இருவடிகளில் இடம் பெற்றன. இதனால் இவ்வணி பெயராயிற்று. வரைபடமாக இப்பா அணியப்பெற்றதால், ஓவியவணியும் இப்பாவிற்குப் பொருந்தும்.

தி$_4$யா யே ஶ்ரிதயேதார்த்யா யானுபாயான்வராநதா꞉ ।
யே(அ)பாபா யாதபாரா யே ஶ்ரியா(ஆ)யாதானதன்வத ॥3॥

1	2	3	4	5	6	7	8
தி	யா	யே	ஸ்ரி	த	யே	தா	ர்த்யா
யா	நு	பா	யா	ன்வ	ரா	ந	தா
யே	பா	பா	யா	த	பா	ரா	யே
ஸ்ரி	யா	யா	தா	ந	த	ன்வ	த



ஆஸதே ஸததம் யே ச ஸதி புர்வக்ஷயாலயே।
தே புண்யதா$_3$ ரதாயாதம் ஸர்வதா$_3$ மா(அ)பி$_4$ரக்ஷத ॥4॥

आसते सततं ये च सति पुर्वक्षयालये ।
ते पुण्यदा रतायातं सर्वदा माऽभिरक्षत ॥४॥

பதவுரை:

ச ஏ ஸததம்	யாரொருவர் நிரந்தரமாக நித்யமாக
ஸதி	மிகவும் உத்தமமான
பூர்வ க்ஷயாலயே	பூர்வத்தில் கர்மங்கள் அழிக்கப்பட்டதால் அடைந்த அந்த ஸித்த நிலையிலே
ஆஸதே	வீற்றிருக்கின்றாரோ
ஸதாயாதம்	வணங்குகின்ற பவ்யர்களுக்கு
புண்யதா	புண்ணியத்தையும் ஸ்ரேஷ்ட பதவியையும் அளிக்க வல்லவரோ அப்படிப்பட்ட ஸித்தபரமேஷ்டிகள்
மா	என்னை
ஸர்வதா அபிரக்ஷத	எப்போதும் எக்காலத்தும் காப்பாற்றுவாராக

11. ஸ்ரீ ஶ்ரேயோஜினஸ்துதி꞉

ஹரதீஜ்யாஹிதா தாந்திம் ரக்ஷார்தா$_2$யஸ்ய நேதி$_3$தா ।
தீர்தா$_2$தே$_3$ ஶ்ரேயஸே நேதாஜ்யாய꞉ ஶ்ரேயஸ்யயஸ்ய ஹி ॥43॥

(அர்த்$_3$த$_4$ப்$_4$ரமநிரௌஷ்ட$_2$யகூ$_3$ட$_4$சதுர்த$_2$பாத$_3$꞉)

हरतीज्याहिता तान्ति रक्षार्थायस्य नेदिता ।
तीर्थादे श्रेयसे नेताज्याय: श्रेयस्ययस्य हि ॥४३॥

பதவுரை:

அஜ்யாய꞉	என்றும் நிலைத்தவரே!
ஶ்ரேயஸி	ஸ்ரீ ஸ்ரேயாம்ஸ நாத ஜிநேஸ்வரரே!
ஆயஸ்ய	தங்களை ஆர்வத்துடன்
நேதி$_3$தா	மனம் மெய் மொழி ஒருங்கிணைந்து
ஆஹிதா	செய்கின்ற
ஈஜ்யா	வழிபாடானது துதியானது
தாந்திம்	ஸம்ஸார துக்கங்களை
ஹரதி	அழித்து விடுகின்றது!
அயஸ்ய	மேலும் நல்லொழுக்கத்தை
ரக்ஷார்தா$_2$	பாதுகாத்து வளர்த்து
ஶ்ரேயஸே	நலன்களைத் தருகிறது!
ஹி	எனவே நிச்சயமாக நீங்கள் ஒருவரே துதிக்கத்தக்க ஒப்பற்ற
நேதா	தனித்தலைவராவீர்!!

விளக்கவுரை:

"ஆதி தீர்த்தனே! என்றும் நிலைத்தவனே! ஸ்ரேயோ நாதரே! தங்களை ஆர்வத்துடன் மனதாலும், துதியாலும், உடலாலும் ஒருமுகப்படுத்தப்பட்ட வழிபாடு ஸம்ஸார துக்கங்களை நீக்குகிறது. அது நல்லொழுக்கத்தை சாரித்ரத்தைப் பாதுகாக்கிறது. மற்றும் பல நலன்களை வழங்குகிறது, எனவே நீங்கள் உலகின் ஒரு தனி தலைவன்!"

குறிப்பு - ஸ்ரீ ஸீதல தீர்த்தங்கரரின் ஸாஸனம் ஒரு கால் பல்ல (பல்ய) கால அளவு முற்றிலும் மறைந்தது. மறுபடியும் ஸ்ரீ ஸ்ரேயாம்ஸ நாதரால் தொடங்கப்பெற்றது.

விளக்கவுரை:

இந்த துதிப்பாவில், அருகஸ்வரூபத்தையும் ஐந்தாம் கடலான பாற்கடலையும் ஒப்பிட்டு நிரூபிக்கிறார். தீர்த்தங்கரர் மூவுலகங்களுக்கும் சாரமாக இருப்பது போல, க்ஷீரசமுத்திரமும் சாரமாக இருக்கிறது. அருகதேவனின் கடையிலா அறிவு, வீரம் முதலிய அனந்த நான்மையின் களஞ்சியமாக இருப்பதைப் போலவே, க்ஷீர சமுத்திரமும் ஜிநபாலகரின் ஜன்மாபிஷேக திருவிழாக்களின் களஞ்சியமாகவும் உள்ளது. அருகனுள் கன்ம மலங்கள் நீங்கிய விமலம் போல, பாசி சேறு முதலிய அசுத்தங்கள் இல்லாததால் க்ஷீர சமுத்திரமும் தூய்மையானது. ஜினேந்திர தேவன் எப்படி முடிவில்லாமல் இருக்கிறாரோ, அதுபோலவே பாற்கடலும் முடிவில்லாதது. மேலும் தீர்த்தங்கரர் எங்ஙனம் சுபாவத்தில் ஆழமாக பொறுமையாக இருக்கிறாரோ, க்ஷீரசமுத்திரமும் கம்பீரமான - ஆழமானது.

வாராய் பவ்வியர்களே! உத்தமமான ஜினேந்திர வடிவில் பாற்கடலில் நீராடி அவரை பக்தியுடன் தியானிப்போம். அங்ஙனம் நீராட நமது தொல்வினை மலங்கள் முதலிய அசுத்தங்கள் அனைத்தும் அழிந்துவிடும். இங்ஙனம் தவத்திரு ஆசார்யர் உபதேசம் அளித்தருளினர். இப்பாடலில் காணும் வருணனையை இந்நூலின் இரண்டாம் திருப்பாவிலும் சைத்யபக்தியிலும் உள்ள வருணனையோடு ஒப்பிட்டு மகிழலாம்.

கீழ்க்காணும் அட்டவணையில் இந்த முரஜபந்தத்தில் அமைந்த திருப்பாவை எழுதிப்பயிலுக!

காமமேத்ய ஜகத்ஸாரம் ஜநா: ஸ்நாத மஹோநிதி$_4$ம் |
விமலாத்யந்த கம்பீ$_4$ரம் ஜிநாம்ருத மஹோத$_4$திம் ||42||



விளக்கவுரை:

புருவாகிய என்றும் அழியாது நிலைத்திருக்கும் முக்திக்கோவிலில் வீற்றிருக்கின்றீர். அத்தகைய திருப்பேற்றைப் பக்தனாகிய எனக்கும் வரந்தந்து எப்போதும் காப்பாற்றுவீராக

இதுவும் *அர்த்$_3$த$_4$ப்$_4$ரம* அணி.



1. ஸ்ரீ விரஷப$_4$ தீர்த்த$_2$ங்கரர் ஸ்துதி

தீர்த்தங்கரரின் எண்வகைச்சிறப்புகள்

நதபீலா ஸநாஶோக ஸுமனோவர்ஷபா$_4$ஸித꞉ ।
பா$_4$மண்ட$_3$லாஸனா(அ)ஶோகஸுமனோவர்ஷ பா$_4$ஸித꞉॥5॥
தி$_3$வ்யைர்த்$_4$வனிஸிதச்ச$_2$த்ரசாமரைர்து$_3$ந்து$_3$பி$_4$ஸ்வனை꞉ ।
தி$_3$வ்யைர்வினிர்மிதஸ்தோத்ரஶ்ரமத$_3$ர்து$_3$ரிபி$_4$ர்ஜனை꞉ ॥6॥
(கு$_3$ப்தக்ரியோ முரஜப$_3$ந்த$_4$꞉।)

(साधिकपादाभ्यास-यमकः)
नतपीला सनाशोक सुमनोवर्षभासितः ।
भामण्डलासनाऽशोकसुमनोवर्षभासितः ॥५॥

(गुप्तक्रियो मुरजबन्धः)
दिव्यैर्ध्वनिसितच्छत्रचामरैर्दुन्दुभिस्वनैः ।
दिव्यैर्विनिर्मितस्तोत्रश्रमदर्दुरिभिर्जनैः ॥६॥

பதவுரை:

ரிஷப:	பிரதம தீர்த்தங்கரரே! ஆதிநாதரே!
நதபீலாஸந	பவ்யர்களின் துன்பங்களை அழிக்கின்றவரே!
அசோக	சோகங்களையும் அழிக்கின்றவரே!
ஸுமந	அருளுள்ளம் உடைவராகிய விருஷப நாதரே!
பாமண்டலாசநசோகஸுமநவர்ஷ	பாமண்டலம், சிம்மாசனம், பிண்டி புஷ்பவ்ருஷ்டி
திவ்யத்வனி ஸிதசக்ரசாமரை: துந்துஸ்வநை:	திவ்யத்வனி, முக்குடை, தர்ம சக்கரம், சாமரை, துந்துபி நாதங்களும் ஆகிய ப்ராதிஹார்யங்களால்
பாஸித:	சோபிப்பவரும்
விநர்மிதஸ்தேத்ரஸ்ரமதுதிரிபி:	நல்ல வித்வான்களால், முனிவர்களால் மிகவும் ஆய்ந்து ஸ்ரமத்துடன் நிர்மாணித்து யாக்கப்பட்ட தோத்திரங்களால்
ஜநை:	துதிக்கின்ற பவ்யர்கள் முனிவர்கள் சூழ

காதகனாக உயர்ந்து மன்னுயிர்களின் பாலகனாக காப்பாற்றுவானானான். உயிர்களின் கண்ணாக சிசிடிவியாக வீற்றருளினர். கீழ்க்காணும் அட்டவணையில் இந்த முரஜபந்தத்தில் அமைந்த திருப்பாவை எழுதிப்பயிலுக!

ஏதச்சித்ரம் க்ஷிதேரேவ கா$_4$தகோபி ப்ரபாலக: ।
பூ$_4$தநேத்ரே! பதேடஸ்யைவ ஶீதலோபி ச பாவக: ||41||



காமமேத்ய ஜகத்ஸாரம் ஜநா: ஸ்நாத மஹோநிதி$_4$ம் ।
விமலாத்யந்த கம்பீ$_4$ரம் ஜிநாம்ருத மஹோத$_4$திம் ||42||

कामभेत्य जगत्सारं जनाः स्नात महोनिधिम् ।
विमलात्यन्तगम्भीरं जिनामृतमहोदधिम् ॥४२॥

பதவுரை:

ஜநா:	பவ்யர்களே
ஏத்ய	நீங்கள் இங்கு
ஜிநாம்ருத	ஜிநேந்திர ரூபமான
மஹோத$_4$திம்	பாற்கடலிலே
காமம்	தங்கள் விருப்பத்திற்கேற்ப
ஸ்நாத	நீராடுவீராக! குளிப்பீராக!
ஜகத்ஸாரம்	அது ஸம்ஸார ஸாகரத்திலிருந்து பவ்யர்களைக் காப்பாற்றும்
மஹோநிதி$_4$ம்	அருமணி போன்றது!
விமல:	விமலமானது!
அத்யந்த கம்பீ$_4$ரம்	குணக்கடலால் நிறைந்த கம்பீரம் உடையது!

10. ஸ்ரீ ஶீதல ஜினஸ்துதி:

ஏதச்சித்ரம் க்ஷிதேரேவ கா₄தகோபி ப்ரபாலக: |

பூ₄தநேத்ரே! பதேऽஸ்யைவ ஶீதலோபி ச பாவக: ||41||

एतच्चित्रं क्षितेरेव घातकोपि प्रपादकः/ ।
भूतनेत्र! पतेऽस्यैव शीतलोपि च पावकः ॥४१॥

பதவுரை:

பூ₄தநேத்ரே!	பவ்யர்களுக்கு கண் போன்றவரே!
பதே	குணச் செல்வரே!
ஏதத்	இதில்
சித்ரம்	என்ன ஆச்சரியம்!
க்ஷிதே	நீங்கள் ஒரு விதத்தில்
கா₄தக: அபி	வினைகளை காதகம் செய்தவராக அழிப்பவராக இருக்கின்றீர்! எனினும்
ப்ரபாலக:	மற்றொரு விதத்தில் காப்பாற்றுபவராக பரிபாலணம்
ஏவ அஸி	செய்பவராக இருக்கின்றீர்!
ச	மேலும்
ஶீதல: அபி	சீதள நாத பகவானே! சீதள தன்மையுடையவராக குளிர்ச்சியை தருபவராக இருக்கின்றீர்!
பாவக;: ஏவ	இருப்பினும் அக்னி போல வினைகளை எரித்தீர்!

விளக்கவுரை:

பூதநேத்ரே அதாவது அருளாட்சியுடைய இறைவா! ஞானாவரணாதி வினைகட்குக் காதகனாக ஆகி மன்னுயிர்க்குக் காவலனாக அமர்ந்தீர். தாங்கள் தண்மையாக இருந்தாலும் தீயாக வினைகளை எரித்தீர். என்னே ஆச்சரியம்! இந்த திருப்பாவில் சீதல- பாவக; காதக- பாலக என்ற எதிர்மறை பதங்கள் சிலேடையாக பொருள் அளிக்கின்றன. சீதலம் என்றால் தண்மை. பாவகம் என்றால் நெருப்பு எனினும் சீதல என்ற பதம் 10-ஆம் தீர்த்தங்கரரைக் குறிக்கிறது. வினைகட்கு

திவி ஏ	தேவைப்பட்ட போது ஆகாயமார்க்கமாக ஸ்ரீ விஹாரம் செய்து திருவறம் பொழியும் அரஹந்த பரமேஷ்டியே!
அவ	எம்மைக் காப்பாற்றுவீராக

விளக்கவுரை:

ஓ ரிஷபதேவரே! உன்னை வாழ்த்துபவர்களின் எல்லா நோய்களையும் நீங்கள் குணப்படுத்துகிறீர்; நீங்கள் துக்கமற்றவர் மற்றும் சிறந்த அறிவைக் கொண்டவர். எம்மை ஆண்டவரே! நீங்கள் சமவசரண பூமியில் மலர்மிசையேகிய போது, தீர்த்தங்கர நாம கர்மத்தின் எழுச்சியின் விளைவாக, தெய்வீக பாமண்டலம், சிம்மாசனம், அசோக மரம் (பிண்டி), மலர்மழை, தெய்வீக ஒலி, துந்துபி, சாமரை ஆகிய எட்டு பிராதிஹார்யங்களோடு மற்றும் தெய்வீக அதிசயங்களால் அலங்கரிக்கப்பெற்றீர்! ஆதியங்கடவுளே! தாங்கள் வானத்தில் பயணித்தாலும், மகத்தான ஆளுமையும் பல உன்னத மக்களும் தங்களுடன் சூழ்ந்தே இருப்பர். பவனவாசிகள், வியந்திரர், ஜோதிடர், இந்திரன், சக்ரவர்த்தி, பலதேவ-வாசுதேவர், விஞ்சையர் முதலாயினோர், பல்வேறு வகையான இசைக்கருவிகளை இசைத்து, அழகான துதிகளால் மிகுந்த முயற்சியுடன் தம்மைப் போற்றுகின்றனர். எனவே, நீயே தனக்குவமையிலாத பரமான்மா!

முதல் துதியில் பீடா என்ற சொல் பாமண்டலா என்ற சீரின் எதுகை நோக்கி பீலா என அமைந்துள்ளது.



கீழ்க்காணும் திருப்பாவை முரஜபந்த சித்திர அமைப்புள் நிரப்பவும்:

நதபீலா ஸநாஶோக ஸுமனோவர்ஷபா$_4$ஸித꞉ ।
பா$_4$மண்ட$_3$லாஸனா(அ)ஶோகஸுமனோவர்ஷ பா$_4$ஸித꞉॥5॥



யத꞉ ஶ்ரிதோபி காந்தாபி$_4$த்$_3$ருஷ்டா' கு$_3$ருதயா ஸ்வவான் ।

வீதசேதோவிகாராபி$_4$꞉ ஸ்ரஷ்டா சாருதி$_4$யாம் ப$_4$வான் ॥7॥

((முரஜப$_3$ந்தம்)

यत: श्रितोपि कान्ताभिर्दृष्टा गुरुतया स्ववान् ।
वीतचेतोविकाराभि: स्त्रष्टा चारुधियां भवान् ॥७॥

பதவுரை:

வீதசேதோவிகாராபி	பகவானானவர் தம்மிடம் இருந்த பாப கர்மங்களை அழித்தவர். அதனால் எந்த வித விகாரங்கள் இல்லாதவர்.
காந்தாபிஸ்ருத: அபி	அழகிய பெண்கள் தம்மை அணுகுகின்ற போதும் கூட
ஸ்வவான்	அசையாத ஆன்ம ஸ்வபாவத்தில் நிலைத்துக் கொண்டு
குருதயா	அவர்களை ஸ்ரேஷ்டமாக குரு போல தந்தை போல
த்ருஷ்ட	பார்த்து அருள்கின்றீர்!
யத: பவான்	அதனால் நீங்கள்
சாருதயாம்	எந்தை போல யாரும் அஞ்சாது அணுகும் அழகான ப்ரம்மா
த்ருஷ்டா	ஆவீர்

விளக்கவுரை:

பெண்களுடனான தொடர்பு பொதுவாக ஒரு ஆணின் மதிப்பைக் குறைப்பதாகக்

லீட$_4$ம்	மிகவும் இனிமையாக இருக்கின்றது!
லோகஸ்ய	லோகத்தில் பவ்ய உயிர்களுக்கு
வாட$_4$ம்	மிகவும்
ருசயே	ருசிகரமாக இருக்கின்றது!
ஜுஷே அபி	மேலும் ஊக்கத்தை தருகின்றது!
த்$_3$விஷே அபி	ஜிநவாணியை வெறுப்பவர் கூட
அம்ருதம்	அமிழ்தத்தை
கஸ்மை தீ$_4$மதே ந	அறிவுள்ள யார் தான் சுவைக்க விரும்பார்? யாரும் இல்லை.

விளக்கவுரை:

ஆழ்ந்த இதயம் கொண்ட புஷ்பதந்த பகவன்! உனது இந்த புனிதமான திருவற ஸித்தாந்தத்தை ரசிக்கும் போது, கேட்கும் போது, படிக்கும் போது, சிந்திக்கும் போது, உங்கள் பக்தர்கள் மற்றும் வெறுப்பாளர்கள் ஆகிய ஒவ்வொரு உயிருக்கும் அறிவும் அன்பும் அதிகரிக்கிறது; ஏனெனில் எந்த அறிவாளி அமிழ்தத்தை சுவைக்க விரும்புவதில்லை? 'தீர' என்ற சொல்லாட்சி தங்களின் உத்தம க்ஷமையை பொறுமையை வெளிப்படுத்துகிறது. ஏனெனில் நீங்கள் புகழ்,மதிப்பு மற்றும் தூஷணை, வசை என்ற இரு வித விமர்சனங்கட்கு அப்பாற்பட்டவர். வேண்டுதல் வேண்டாமையில்லாதவர்.

கீழ்க்காணும் அட்டவணையில் இந்த முரஜபந்தத்தில் அமைந்த திருப்பாவை எழுதிப்பயிலுக!



விளக்கவுரை:

பிறவித்துன்பத்தை அழிப்பவனே! பிறவி நோயிலிருந்து விடுபட்டவரே! வாராய் ஆன்மஞானிகளில் சிறந்த புஷ்பதந்தரே! உங்கள் வாலறிவில், மூவுலக காட்சி, சேற்றில் பதிக்கப்பட்ட பசுவின் குளம்புகளைப் போலத் தோன்றுகின்றன. அதாவது மிகவும் சிறிதாக ஆயினும் தெள்ளத் தெளிவாக தோன்றுகின்றது. கடவுளே! உங்கள் அகன்ற ஆழமான அறிவு ஒரு பரந்த கடல் போன்றது. உங்கள் அறிவின் அனந்தத்தின் தோற்றம் அறியும் பொருட்களின் பரிமாணத்தினும் பெரிது.

இந்த பாடலில் ஆண்ட உவமையை துதிப்பா எட்டோடு ஒப்பிடுக.

இப்பாசுரம் முரஜபந்த அணியையுடையது. கீழ்க்காணும் அட்டவணையில் இந்த திருப்பாவை எழுதிப்பயிலுக!

ஶோகக்ஷய க்ருத$_3$வ்யாதே$_4$ புஷ்பத$_3$ந்த! ஸ்வவத்பதே! ।
லோகத்ரயமித$_3$ம் போ$_3$தே$_4$ கோ$_3$பத$_3$ம் தவ வர்த்ததே ॥ 39 ॥ (முரஜ:)



லோகஸ்ய தீ$_4$ர! தே வாட$_4$ம் ருசயேபி ஜுஷே மதம் ।
நோ கஸ்மை தீ$_4$மதே லீட$_4$ம் ரோசதேஷி த்$_3$விஷே(அ)ம்ருதம் ॥40॥
((முரஜ:)

लोकस्य धीर! ते वाढं रुचयेपि जुषे मतम् ।
नो कस्मै धीमते लीढं रोचतेपि द्विषेऽमृतम् ॥४०॥

பதவுரை:

தீ$_4$ர!	உத்தமக்ஷமையில் வல்ல தீரரே!
தே மதம்	தங்களுடைய சித்தாந்தம்

கருதப்பட்டாலும், அது வீதராகியாகிய உங்கள் கௌரவத்தை எந்த வகையிலும் குறைக்காது. ஏனெனில், தேவரீரை வழிபடும் பெண்கள் தாமாகவே அந்தக் காலத்தில் கோளாறுகளிலிருந்து விடுபட்டவர்களாகவும், ஆன்மவுணர்வு உடையவர்களாகவும் இருப்பதால் அவர்கள் கோளாறுகளிலிருந்து விடுபடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், அழகான கீர்த்தனைகளால் பெண்கள் உங்களுக்கு பக்தி செய்தால், குழப்பம் இருப்பதாகத் தெரியவில்லை. ஶ்ரீ பக்தாமரம் 15-ஆவது துதியுடன் ஒப்பிட்டு நோக்குக.



வாலறிவின் மகிமை

விஶ்வமேகோ ருசாமா(ஆ)கோ வ்யாபோ யேனார்ய வர்த்ததே ।
ஶஶ்வல்லோகோ(அ)பிசா(அ)லோகோத்$_3$வீபோஞானார்ணவஸ்யதே

विश्वमेको रुचामाऽऽको व्यापो येनार्य्य! वर्त्तते ।
शश्वल्लोकोऽपि चाऽलोको द्वीपो ज्ञानार्णवस्य ते ॥८॥

பதவுரை:

ஆர்ய!	ஸ்ரேஷ்ட ஆதிநாத பகவந்தரே!
ஏக: விஶ்வம் வ்யாப:	லோக ஆலோகம் முழுமையும் ஒருங்கிணைந்து
ருசாம்	கேவலஞான ஒளியிலே
ஆக:	அடங்கி விடுகின்றன
யேன	அதனால்
ஶஶ்வத்	நித்யமான
லோக: ச அலோக அபி	லோக ஆலோகம் முழுமையும்
தே ஞானார்ணவஸ்ய	தங்கள் ஞானதீபக் கடலிலே
த்$_{3}$வீப: வர்த்ததே	சிறு தீவு போல தெரிகின்றன

விளக்கவுரை:

பெருமானே! உங்கள் வாலறிவில் அனைத்து உலகப் பொருட்களையும் வானவெளியையும் தாமாகவே தென்படும். அதேபோல, உங்கள் அறிவிற்குள் உலகங்களும் அலோகமும் உள்ளன. தீவுகளை விட கடலின் விரிவு எவ்வளவு பெரியதாக இருக்கிறதோ, அதுபோல உங்கள் அறிவின் விரிவு உலகத்தையும் மற்ற அலோகத்தையும் விட பெரியது. விஷயங்கள் நிச்சயமாக எல்லையற்றவை, ஆனால் உங்கள் எல்லையற்ற அறிவோடு ஒப்பிடுகையில் அவை குறைவு; எல்லையற்றதும் கூட எல்லையற்ற மாறுபாடுகளைக் கொண்டுள்ளது. எனவே உங்கள் அறிவுக் கடலில், பரந்த கடலுக்குள் ஒரு தீவு இருப்பது போல மூவுலகமும் அலோகமும் ஒரு தீவேயாகும்.

சாத்தியமான அறத்தின் பந்தத்தைப் புரிந்துகொள்வதும் அதைப் பரிசீலித்த பிறகு பாராட்டத்தக்கதும் ஆகும்.ஏனென்றால் அதிலிருந்து இம்மைக்கும் மறுமைக்கும் பல பலன்கள் கிடைக்கின்றன.

பகவந்தரே! உங்களை நோக்கிய குறைவான மனம், பேச்சு, உடல் ஆகியவற்றின் இயல்பான செயல்பாடு ஆன்மாவுக்கு இவ்வளவு பெரிய நன்மை தருகிறது என்றால், மனம், பேச்சு, உடல் முழுவதுமாக உங்களை வழிபடுவதால் ஆத்மாவுக்கு எவ்வளவு பெரிய பலன் கிடைக்கும். இதில் என்ன ஆச்சரியம்!

இது ஸ்லோக யமகம் பாசுரங்கள் (37, 38) ஆகிய இந்த இரு துதிகளில் இரண்டாம் அழகு உதடு தொடும் உகரம் ஊகாரம் ஒகரம் மகரம் பகரம் முதலிய வர்கங்கள் விடப்பட்டது. அத: நிரௌஷ்ட்$_{2}$யஸ்லோகம் என்ப.

"உஊ ஒஓ ஔ இதழ் குவிவே" - (*நன்னூல்* 78); *மீகீழ் இதழ்உறப் பமப் பிறக்கும்"* - (*நன்னூல் 81*)

ஶோகக்ஷய க்ருத$_{3}$வ்யாதே$_{4}$ புஷ்பத$_{3}$ந்த! ஸ்வவத்பதே! ।
லோகத்ரயமித$_{3}$ம் போ$_{3}$தே$_{4}$ கோ$_{3}$பத$_{3}$ம் தவ வர்த்ததே ॥ 39 ॥ (முரஜ:)

शोकक्षयकृदव्याधे! पुष्पदन्त! स्ववत्पते!
लोकत्रयमिदं बोधे गोष्पदं तव वर्त्तते ॥३९॥

பதவுரை:

ஶோகக்ஷய க்ருத்	மோஹ வினைகளை அழித்தவரே!
அவ்யாதே!	பிறவி நோய் இல்லாதவரே!
ஸ்வவத்பதே!	தமக்குத் தாமே இறைவ!
புஷ்பத$_{3}$ந்த!	புஷ்பதந்த தீர்த்தங்கரரே!
தவ போ$_{3}$தே$_{4}$	ஆன்ம ஞானத்தில் தெளிந்தவரே!
இத$_{3}$ம்	தங்களின் ஹிதா ஹிதம்
லோகத்ரயம்	மூவுலகிலே
கோ$_{3}$பத$_{3}$ம்	சேற்றில் பதிந்த குளம்பு சின்னம் போல
வர்த்ததே	காணப்படுகின்றது!

ஸ	அந்த
ஶம்	மோக்ஷ சுகத்தை
தேஹி	அளிப்பீராக!
யேந	ஏனெனில்
அத்ர	இந்த ஸம்ஸார
அஶம்	துக்க
ஸிதம்	பந்தத்திலிருந்து
ந	நாங்கள்
ஸத்ய:	விரைவில்
ஸ்ரேய:	மோக்ஷ கல்யாணத்தை அருள்வீராக!

விளக்கவுரை:

ஸ்ரீ புஷ்பதந்த தீர்த்தங்கரர் துதியை துதித்து வருகிறோம். அவருடைய மறுபெயர் ஸுவிதி. விதி என்றால் முறை. விதிமுறை என்றால் வாழும் வழிமுறை. சுவிதி மிகவும் நன்றாக வாழ்வாங்கு வாழ காட்டி தந்தவர் என்பதால் சுவிதி என்ற பெயர் பெற்றவர். முதல் இரண்டு துதிப்பாக்களை ஸ்லோக யமகமாக வைத்துள்ளார். ஒரே ஸ்லோகத்தை மறுபடியும் வைத்து மற்றொரு ஸ்லோகத்தை வைத்துள்ளார்.

அகமும் புறமும் லட்சுமியால் அலங்கரிக்கப்பெற்றவனும், அனைவராலும் தெளிந்து அருகக்கூடியவரும், (உலகில் உள்ள வேறு எந்த சக்தியாலும்) வெல்ல முடியாதவரும், உன்னதமான, பிறப்பற்ற மற்றும் பிரியமான மோக்ஷ லக்ஷ்மியின் வரனே! நயனும் மனமும் கவர்ந்த புகழ் பெற்ற மலர்ப்பல்லைக் கொண்ட ஜினேந்திர! உனது மனத்தாலும், வாக்காலும், உடலாலும் செய்யும் சிறு முயற்சியால் உன்னை நினைத்து, உன்னைப் போற்றி, வணக்கம் செலுத்தி உயிர்களுக்கு வரும் பெரிய திருவினை, யூகித்து போற்றத் தக்கது. பிரபுவே ! எனக்கும் பிறவாநிலை அருளுவீராக. அதனால் எனது இழி பிறப்பிலிருந்து ஆழ்ந்த துக்கஸாகரத்திலிருந்து வீடு பெறுவேன்.

உனது துதியால் வரும் புண்ணிய பந்தம் சத்மஸ்த உயிர்களுக்கு நேரிடையாகத் தெரியாது. எனினும் அந்த சுப பந்தத்தால் எந்தப் பொருள் கிடைக்கிறதோ அதன் வழி உணர்வு பெற்றுத்தெளியலாம். இந்த அனுமான திட்டம் அறத்தின் முழுமையான பிணைப்பைப் புரிந்து கொள்ள உதவாவிட்டாலும்,



ஶ்ரித꞉ ஶ்ரேயோ(அ)ப்யுதா$_3$ஸீனே யத்த்வய்யேவா(அ)ஶ்னுதே பர꞉ ।
க்ஷதம் பூ$_4$யோ மதா$_3$ஹானே தத்த்வமேவார்சிதேஶ்வர꞉ ॥9॥

श्रितः श्रेयोऽप्युदासीने यत्त्वय्येवाऽश्नुते परः ।
क्षतं भूयो मदाहाने तत्त्वमेवार्चितेश्वरः ॥९॥

பதவுரை:

உதா$_3$ஸீனே அபி	வீதராக பரமேஷ்டியானதினாலே தாங்கள் மத்யஸ்த ஃபாவத்தை சம நோக்கை உடையவராக இருந்தாலும் கூட
த்வயி ஏவ ஶ்ரித:	தங்கள் சரணத்தை மட்டுமே
பர: அஶ்னுதே	பவ்யர்கள் அணுகுகிறார்கள்
ஶ்ரேயோபி	நீங்கள் அவர்களுக்கு நன்மையையே, கல்யாணத்தையே அளிக்கின்றீர்கள்
யத் மதா$_3$ஹானே	மோஹனீய கர்மத்தை அழிக்காமல் ஆணவத்தை உடையவர்களாக இருக்கின்ற மற்றவர்களை அணுகுகின்றவர்கள்
பூய: க்ஷத	அடிக்கடி அழிவையே காண்கின்றார்கள்
தத் த்வமேவ	அதனால் தாங்கள் மட்டுமே
அர்சித: ஈஶ்வர:	பூஜிக்க தகுதியுடையகடவுளாவீர்

விளக்கவுரை:

தூய உணர்வுடன் உன்னைப் போற்றுபவர் நல்வினையூற்றினால் பல பாக்கியங்களைப் பெறுகிறார், மேலும் உங்களைக் கறைபடிந்த உணர்வுகளால் விமர்சித்து, வேறொரு கடவுளையோ அல்லது அரசனையோ சேவிப்பவர், அசுத்தமான தீவினையூற்றினால் பல துன்பங்களைப் பெறுவர், அதேசமயம் போற்றுபவர் மற்றும் தூற்றுபவர் இருவருக்கும் (ஒன்றை நல்லது, மற்றொன்று கெட்டது என்று கருதாது) நீங்களே ஒரே மாதிரியான சமநோக்கையுடையீர்!

இத்திருபாடலை ஸ்ரீ பக்தாமரம் 10-ஆவது துதியுடனும் ஸ்ரீ ஸ்வயம்பு தோத்திர 69-துதியுடனும் ஸ்ரீ விஷாபஹார தோத்திர 7- ஆம் துதிப்பாவுடனும் ஒப்பிட்டு நோக்குக.

இதுவும் முரஜபந்த அணியில் அமைந்துள்ளது.



பா$_4$ஸதே விபு$_4$தா(அ)ஸ்தோநா நாஸ்தோதா பு$_4$வி தே ஸபா$_4$꞉

யா꞉ ஶ்ரிதா꞉ ஸ்துத கீ$_3$த்யா நு நுத்யா கீ$_3$தஸ்துதா꞉ ஶ்ரியா ||10||

(க$_3$தப்ரத்யாக$_3$தாத்$_3$த$_4$:)

(गतप्रत्यागतभाग:)

भासते विभुताऽस्तोना ना स्तोता भुवि ते सभा: ।
या: श्रिता: स्तुत! गीत्या नु नुत्या गीतस्तुता: श्रिया ॥१०॥

பதவுரை:

ஸ்துத:	காலங்காலமாக மிகவும் நன்றாக வணங்கப்படும் ஆதிநாதரே!
கீத்யா நுத்யா	கீதத்தோடும் பாடல்களோடும்

9. ஸ்ரீ புஷ்பத$_3$ந்த ஜினஸ்துதி

ஶம்ஸநாய கநிஷ்டாயாஸ்சேஷ்டாயா யத்ர தேஹிந ।

நயேநாஶம்ஸிதம் ஶ்ரேய: ஸத்ய: ஸந்நஜ ராஜித: ||37||

ஶம் ஸ நாயக நிஷ்டாயாஸ்சேஷ்டாயா யத்ர தேஹி ந: ।

ந யேநாஶம் ஸிதம் ஶ்ரேய: ஸத்ய: ஸந்நஜராஜித: ||38||

(நிரௌஷ்ட்$_2$யஶ்லோகயமக:)

शंसनाय कनिष्ठयाश्चेष्टाया यत्र देहिन: । नयेनाशंसितं श्रेय: सद्य: सन्नज राजित: ॥३७॥	श स नायक! निष्ठयाश्चेष्टाया यत्र देहि न: । न येनाशं सितं श्रेय: सद्य: सन्नजराजित: ॥३८॥

பதவுரை:

ஸந்நஜர	மூப்பில்லாதவரே!
இஷ்டாயா நிஷ்டாயா	மிகவும் பிரியமான மோக்ஷ பதவிக்கு
சேஷ்டாயா	வழி காட்டுகின்ற
நாயக	ஸ்ரீ புஷ்பதந்த தீர்த்தங்கரரே!
அஜித	எவராலும் வெல்ல முடியாதவரே!
யத்ர	அப்படிப்பட்ட புஷ்பதந்த தீர்த்தங்கரருக்கு
கனிஷ்டாயா	மிகவும் சிறிய அளவில்
சேஷ்டாயா	மனம் மெய் மொழிகளால் செய்கின்ற பக்தியானது
தேஹிந	பவ்யர்களுக்கு
ய:	அந்த
ஸந்	மிகவும்
ஶ்ரேய:	தேவைப்படுகின்ற புண்ணிய பந்தமானது
நயேநா	நயத்தாலும்
ஆஶம்ஸிதம்	ஆகுமென்று அறிகின்றோம்!
ஶம்ஸநாய	அப்படிப்பட்ட
ராஜித:	கீர்த்தி தேவைப்படுகிறது!
அஜ	பிறவா நிலை பெற்றவரே!
ந:	எங்களுக்கு
ஸத்ய:	மிக விரைவில்

இருசுடர் வர்ணனையாக காப்பிய மரபாக தண்டியலங்கார இலக்கணப்படி ஸ்துதிவித்யா ஒரு காப்பியம் என்ற வகையில் அணிகள், ஸ்லேடைகள் நிறைந்து பொருள் செறிந்து கதாநாயகனாக உத்தம பாத்திரத்தை வைத்த உன்னதமான இந்த ஸ்துதி வித்யாவைவிட பெரிய காப்பியத்தை நம்மால் யோசித்துப் பார்க்கக் கூட முடியாது. ஒவ்வொரு தீர்த்தங்கரராக 24 தீர்த்தங்கரர்களையும் கதாநாயகனாக வைத்து அதற்குள்ளேயே 12 சக்ரவர்த்திகளையும் வாசுதேவர் பிரதி வாசுதேவர் என நிறைந்திருக்கின்றன. பகவானின் திருநாமத்தை எடுத்தாலே திருச்சரணத்திற்குள்ளேயே பல திருச்சரிதங்கள் நிறைந்திருக்கின்றன எனப் புரிந்து கொள்கின்றோம்.

*அர்த்$_{3}$த$_{4}$ப்$_{4}$ரமகூ$_{3}$ட$_{4}$த்$_{3}$விதீயபாத$_{3}$:*என்ற அணிக்கேற்ப இரண்டாம் அடியில் உள்ள எழுத்துகள் மட்டுமே மற்ற மூவடிகளிலும் அமைந்துள்ளன.

இத்திருப்பாவை அர்த்தப்ரம அணி அட்டவணையில் எழுதிப்பயிலுக!

சாருஸ்ரீஶுப$_{4}$தௌ$_{3}$ நௌமி ருசா வ்ருத்$_{3}$தௌ$_{4}$ ப்ரபாவநௌ ।

ஸ்ரீவ்ருத்$_{3}$தௌ$_{4}$தௌ ஶிவௌ பாதௌ$_{3}$ ஶுத்$_{3}$தௌ$_{4}$தௌவ ஶஶிப்ரப$_{4}$



கீதஸ்துதா:	சங்கீத துதிகளோடு
தே ஸ்தோதோ	துதி செய்கின்ற
நா	பவ்யர்கள்
புவி	மண்ணுலகிலே
யாம் ஸ்ரயா	எட்டு மஹாப்ராதிஹார்யங்கள் உடைய லக்ஷ்மிகளால் சூழ்ந்திருக்கப் பெற்று தங்களைப்போலவே
நு	நிச்சயமாக பவ்யர்கள்
விபுதாஸ்தோனா:	யாதொரு பெருமையும் குறையாமல்
ஸபா பாஸதே	அவர்கள் வருங்காலத்தில் ஸமவ ஸரணத்தில் ஒளிவீசி விற்றிருப்பர்.

விளக்கவுரை:

பூஜ்யனே! உன்னைப்பக்தியுடன் கீதசங்கீதத்தோடு போற்றுவதன் மூலம், ஒருவன் தீர்த்தங்கரனாகிறான், அதனால் அவனும் அகமும் புறமும் லட்சுமியாக விளங்கும், பெரியோர்களின் வணக்கத்தால் போற்றப்படும் சமவஸரண சபையில் உன்னைப் போலவே பேரழகாகிறான். வேறு எந்த வழிபாட்டாளரின் முயற்சியாலும் இதைச் செய்ய முடியாது; ஏனெனில் கேவலி அல்லது சுருத கேவலியின் பாதமூலத்திலிருந்து தான் தீர்த்தங்கர நாம கர்மத்தின் ஊற்று வருகிறது.

க$_{3}$தப்ரத்யாக$_{3}$த அலங்காரம் (முன்னும் பின்னும் படியும் அணி) இந்த அணியின் சிறப்பு என்னவென்றால், நேராகப் படிக்கும்போது தோன்றும் அதே எழுத்துக்கள், எதிர் வரிசையில் - மறுபக்கத்திலிருந்து படிக்கும்போதும் தோன்றும். அதேபோல, பாடலின் பிற்பகுதியையும் எழுத்துப்பூர்வமாகப் படிக்க வேண்டும். இதனை அனுலோமபிரதிலோம அலங்காரமும் என்ப.



ஸ்வயம் ஶமயிதும் நாஶம் விதி$_3$த்வா ஸன்னதஸ்து தே ।

